1978 மார்ச் 15]

கூத்தாநல்லூருக்குக் குடிநீர் வழங்கல்.

*579 வினா.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

மன்னார்குடி ஒன்றியம், கூத்தாநல்லூர் பேரூராட்சியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கூத்தாநல்லூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

BOARD UNDER CONTRACT LABOUR ACT.

*580. Q -Thiru RUMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) names of persons nominated to the Board under the Contract Labour (Regulation and Abolition) Act: and

(b) basis of the representations on the Board?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ)—

1. செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை-9 ..	தலைவர்.
2. தொழிலாளர் துறை ஆணையர் (அல்லது) அவர் இல்லாத சமயம் தலைமைத் தொழிற்சாலை ஆய்வாளர், சென்னை-5 ..	அங்கத்தினர்.

மற்றப்பிரதிநிதிகள்.

தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப்பணித் துறை, சென்னை-5 ..	அங்கத்தினர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிறுவனத்தின் பெயர்.	உறுப்பினர் பெயர்.
1 தமிழ்நாடு மின்சார வாரியம்.	திரு. சி. சஞ்சீவி, தலைமைப் பொறியாளர் (பொது).
2 தென்னிந்திய நிர்வாகிகளின் பேரவை ..	திரு. பி. டி. சம்பத், தொழில் தொடர்பு மேலாளர், பின்னி லிமிடெட், சென்னை.
3 என்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கார்ப்பொரேஷன் லிமிடெட் ..	திரு. ஏ. கே. நடராசன்.
4 ராமன் பிரதர்ஸ் ..	திரு. எம். என். ராஜாராமன்.
5 இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் ..	திரு. கே. ராமமூர்த்தி, தலைவர்
6 ஹிந்து மஸ்தூர் சபா ..	திரு. ஜி. பலராம்.
7 அண்ணு தொழிற்சங்கப் பேரவை	திரு. வி. பெருமாள்.
8 அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரஸ் ..	திரு. ஜெ. சைலம் பால்.

(ஆ) 1975-ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் நீக்குதல்) விதிகளின் கீழ் விதி எண். 3-இன் படி ஒப்பந்தத் தொழிலாளர் மாநில ஆலோசனைக் குழுவில் பிரதி நிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் படித்த பிரதிநிதித்துவப் பட்டியலில் சி.ஐ.டி.யூ. பிரதிநிதிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றும் பல தொழிற்சங்க பிரதிநிதிகள் இடம் பெறவில்லை என்பது தெரிகிறது. அந்தப் பட்டியல் எமர்ஜன்ஸி காலத்தில் தயாரிக்கப் பட்டது என்று நினைக்கிறேன். ஆகையால் ''புரோ எமர்ஜன்ஸி, ஆன்டி எமர்ஜன்ஸி'' என்ற பேச்சில்தான் அமைக்கப் பட்டிருக்கும். எனவே, அதை ஒரு முழுமையான பிரதிநிதித்துவம் கொண்டதாக அமைக்கும் வகையில் '' ரீ கான்ஸ்டிடியூட் '' பண்ண அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, 1976 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30-ந் தேதி இந்தக் குழு அமைக்கப் பட்டது. ஆனால், அதனுடைய உறுப்பினர் பெயர்கள் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் தேதியன்று அறிவிக்கப்பட்டது. இந்தக் குழு அமைக்கப்பட்டது 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் ரூல்ஸ் பிரிவு 3, மற்றும் 4-ன்

1978 மார்ச் 15]

படி அமைக்கப்பட்டது. அதில் இடம்பெற்றிருக்கும் பிரதிநிதிகளுக்கு, கெசட்டில் என்று வந்ததோ அன்றிலிருந்து 3 ஆண்டுகளுக்குப் பதவி உண்டு. ஆகையால், இந்தக் குழு அமைக்கப்பட்ட 1977-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதியிலிருந்து அவர்களுக்கு 3 ஆண்டுக் காலம் சட்டப்பிரகாரம் பதவி உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, என்னுடைய கேள்வி ,, என்டயர்லி டிஃபரண்ட்''. அந்தக் குழு ''புரோ எமர்ஜன்ஸி, ஆண்டி எமர்ஜன்ஸி'' என்ற பேசிசில், எமர்ஜன்சியை ஆதரித்தவர்களைக்கொண்டு அமைக்கப்பட்டது. இப்போது நிலைமை மாறியிருக்கிறது. ஆகையால் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் எல்லா நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் அந்தக் குழுவை ''ரீ கான்ஸ்டிடியூட்'' செய்யும் உத்தேசம் உண்டா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர, 3 ஆண்டா, அதற்கு மேலா என்பதல்ல.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நான் முன்பே சொன்னது போல 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு கான்ட்ராக்ட் லேபர் ரெகுலேஷன் ரூல்ஸ் 3, மற்றும் 4 ன்படி மிகத் தெளிவாக அவர்களுக்கு 3 ஆண்டுக் கால பதவி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ரா. உமாநாத்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் மற்றவர்களைப் போல அடிக்கடி கேட்பது கிடையாது. என்னுடைய கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரு. ஜேம்ஸ் அவர்களை அழைத்தேன். முதலில் அவர்கள் கேட்கட்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அந்த போர்டு அங்கத்தினர்களைப் பார்க்கும்போது நெருக்கடி காலத்தில் அப்போதிருந்த அரசை ஆதரித்த அரசியல் கட்சி தொடர்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள்தான் இடம் பெற்றிருக்கிறார்கள். அன்றையதினம் நெருக்கடியை எதிர்த்த மற்ற அரசியல் கட்சி தொடர்புடைய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இடம் பெறவில்லை, ஆகவே, ''ரீ கான்ஸ்டிடியூட்'' பண்ணவேண்டிய தேவை இல்லை என்றாலும் எந்தெந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் அதில் இடம் பெறவில்லையோ அவர்களுக்கு இடமளிக்க அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப்பேரவைத் தலைவரவர்களே, சட்டம் அனுமதித்தால் அதைப்பற்றி பரிசீலிப்பதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி கேள்வி 581-ம், 582ம் தள்ளி வைக்கப்படுகிறது.

திண்டிவனத்தில் பேருந்து நிலையம்.

*583 வினா— திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டிவனத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சுமார் 5 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டிமுடிக்கப்பட்டும் இன்னும் திறக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) திண்டிவனத்தில் உள்ள பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் விரைவுப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் வேலை முடிக்கப்பட்டது. விரிவுபடுத்தப்பட்ட நிலையம் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் முதல் பேருந்துகளின் உபயோகத்தில் இருந்து வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

புதுக்கோட்டையிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

*584 வினா— திரு. த. புஸ்பராஜு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கும், புதுக்கோட்டையிலிருந்து கோயம்புத்தூருக்கும் விரைவு பஸ் விட நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தற்சமயம் இல்லை.

(முற்பகல் 10-00)

திரு. த. புஸ்பராஜு : தலைவரவர்களே, சுமார் ஒரு வருட காலத்திற்கு முன்பு புதுக்கோட்டையிலே இருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடப்பட்டிருந்தது. ஆம்னி பஸ்ஸின் கட்டணத்தை விட அது ரூபாய் 5 அதிகமாக இருந்த காரணத்தால் வசூலாகாத நிலையில் நிறுத்தப்பட்டது; அந்த பஸ் திரும்